## DEPARTMENTAL EXAMINATIONS - DEC 2018

## 104 - Tamil Nadu Forest Department Code and Accounts

## (Without Books)

(1) வனக்காப்பாளர் அணியக்கூடிய தலைபாகை என்ன?

விடை: காக்கி டெரி கூர்கா ஹட்கிரின் பேண்டுடன்

(2) புலிகள் பாதுகாப்பு திட்டம் இதனடிப்படையில் தயார் செய்யப்படுகிறது?

விடை: தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் வழிகாட்டுதல்

(3) வனச்சரக அலுவலர் உதவி வனப்பாதுகாவலராக பதவி உயர்வு பெற கீழ்கண்ட ஆண்டுகளுக்கு குறையாமல் பணி முடித்திருக்க வேண்டும்?

விடை: 8

(4) ஒரு அரசு ஊழியர் துறை தேர்வு எழுத எத்தனை முறை அரசு பணியாக எடுத்துக்கொள்ளப்படும்?

விடை: இருமுறை

(5) வனத்துறையில் வன குத்தகைத்தாரராக பதவி செய்துகொள்ள பதிவு கட்டணம் எவ்வளவு?

விடை: ரூ.3000/-

(6) வனவர்கள் இந்த கால அளவில் நாட்குறிப்புகளை அளிக்க வேண்டும்?

விடை: வாரந்தோரும்

(7) பாதுகாப்பு பகுதிகள் இதனடிப்படையில் ஆட்சி செய்யப்பட வேண்டும்?

விடை: நிர்வாக திட்டம்

(9) காப்பு காடுகள் பதிவேடு பராமரிக்கப்படும் அலுவலகம்?

விடை: கோட்ட வன அலுவலகம்

(10) மாவட்ட அரசிதழ் வெளியிடுவதற்கான கால அளவு எவ்வளவு?

விடை: வாரத்திற்கு ஒரு தடவை

(11) வேலையின் மதிப்பீட்டில் எவ்வளவு தொகை முன்வைப்பு தொகையாக வசூலிக்கப்பட வேண்டும்?

விடை: 2.5%

(12) கூடாரங்களை தள்ளுபடி செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர்?

விடை: வனப்பாதுகாவலர்

www.thamizhforest.com

(13) நிர்வாக அறிக்கையில் எத்தனை பகுதிகள் உள்ளது?

விடை: 8

(14) வனக்கிடங்கு கீழ்கண்ட அலுவலரின் அனுமதியோடு துவக்கப்பட வேண்டும்?

விடை: வனப்பாதுகாவலர்

(15) படிவம் 6 அறிக்கை இதனை விவரிக்கிறது?

விடை: படிவம் 4-ல் கண்டவாறு விற்பனை செய்யப்பட்ட விபரம்

(16) தற்காலிக பணியிடங்கள் (வேலை செலவினங்கள்)?

விடை: ஒப்பளிக்கப்பட்ட வேலைகளுக்காக மாறாது

(17) எவ்வளவு காலத்தில் மாநில அளவில் ஒப்புதல் புள்ளி அளவில் ஒப்புதல் புள்ளி அழைப்பிதழில் வெளியிடப்பட வேண்டும்?

விடை: வாரம் ஒரு முறை

(18) வன முன்பணம் பெறுவதில் வனச்சரக அலுவலருக்கு அதிகபட்ச வரம்பு எவ்வளவு?

விடை: ரூ.50,000/-

(19) தர விலை நிர்ணயம் செய்ய அதிகாரம் படைத்த அலுவலர்?

விடை: வனப்பாதுகாவலர்

(20) வாகனங்களில் வாகன உரிமை அலுவலர்களால் அவசர நிமித்தம் காரணமாக சிறு மற்றும் குறுகிய பராமரிப்பு செலவினங்கள் தானியங்கி பொறியாளரின் அனுமதியின்றி செய்வதற்கான வரம்பு?

விடை: ரூ.750/-

(21) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் ஆ மற்றும் இ பிரிவு தற்காலிக பணியிடங்களை உருவாக்க தகுதி பெற்ற அலுவலர்?

விடை: அரசு

(22) வனக்கிடங்குகளில் வனச்சரக அலுவலரால் தொடர் ஆய்வு செய்யப்பட வேண்டிய அதிகபட்ச கால இடைவெளி?

விடை: ஆறு மாதம்

(23) எந்த முடிவில் கோப்பு அசலாக அனுப்பப்படும்?

விடை: மூ.மு

(24) நடப்பு கோப்பில் தேசபடங்களை ஆதாரமாக காட்டும்போது கீழ்கண்ட எந்த நடைமுறைகளை கடைபிடிக்கப்பட வேண்டும்?

விடை: கொடியிட வேண்டும்



www.thamizhforest.com

(25) நீதிமன்றங்களுக்கு கோப்புகளை அனுப்பும் போது கீழ்கண்டவற்றை மட்டும் அனுப்ப வேண்டும்?

விடை: நடப்பு கோப்பு

(26) கோப்புகளில் வரைவுகளை எவ்வாறு வைக்கவேண்டும்?

விடை: நடப்பு கோப்பு மேல்

(27) இரகசிய தாள்கள் அனுப்ப எத்தனை உறைகள் பயன்படுத்தப்படும்?

விடை: மூன்று உறை

(28) அனுப்புகை முத்திரை உடன் முடிவு கோப்புகளில் எதில் குத்தப்பட வேண்டும்?

விடை: சுத்த நகல் பதிவேடு

(29) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முடிவுற்ற கடிதங்களை அனுப்பிய பிறகு யாருடைய வசம் ஒப்படைத்து தன்பதிவேட்டில் கையொப்பம் பெற வேண்டும்?

விடை: பதிவறை எழுத்தர்

(30) அரசிடமிருந்து வரப்பெறும் ஆணைகளை எவ்வாறு முடிவு செய்யப்பட வேண்டும்?

விடை: கோப்பு முடிவு

(31) மாநிலச் சட்டங்கள் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டு செய்யப்பட வேண்டும்?

விடை: மூன்றாண்டு

(32) ஒரு அலுவலர் நூலகப் பாதுகாவலராக பணியில் சேர்ந்த எத்தனை நாட்களுக்குள் காணாமல் போன புத்தகங்கள் விபரங்களை தெரிவிக்க வேண்டும்?

விடை: ஒரு மாதம்

(33) அரசு அலுவலகங்களில் பெண் அரசு ஊழியர் ஒரு மாதத்திற்கு எத்தனை நாட்கள் எந்த கிழமைகளில் தாமதமாக வரலாம்?

விடை: மூன்று வெள்ளிக்கிழமை

(34) வழக்குகள் தனிப்பதிவேடு எந்த படிவத்தில் பராமரிக்கப்படுகிறது?

விடை: பி - படிவம் VIII A

(35) விடுமுறை நாளில் வேலை பார்த்த நாட்களுக்கு உரிய ஈடு கட்டும் விடுப்பு எத்தனை நாட்களுக்கு எடுக்க வேண்டும?

விடை: ஆறு மாதம்

(36) மனுக்கள் எழுதும் தாளின் அளவு?

விடை: 13 நீளம் 8 $^{1/2}$ அகலம்



www.thamizhforest.com

(37) எத்தனை நாட்கள் தாமதமாக வந்தால் ஒரு நாள் தற்செயல் விடுப்ப பறிக்கப்படும்?

விடை: ஐந்து

(38) அலுவலகம் திறந்த எத்தனை நிமிடங்களுக்கு பின்னா் வருகை பதிவேடு முடிக்கப்படும்?

விடை: 15 நிமிடங்கள்

(39) தன்பதிவேடு எத்தனை ஆண்டுகளுக்கு பின்னர் அழிக்கப்படும்?

விடை: ஐந்து ஆண்டுகள்

(40) வருடாந்திர பணயாளர்கள் விபர பட்டியல் தயார் செய்ய வேண்டிய நாள்

விடை: ஜனவரி 31

(41) சாத்தனூர் முதலை இனப்பெருக்க மையத்திற்கு நுழைவு கட்டணம் விதிக்க தகுதிபெற்ற அலுவலர்.

விடை: அரசு

(42) கோட்ட வன வரைபடத்தினை வனப்பாதுகாவலர் ஆய்வு செய்யப்பட வேண்டிய கால அளவு

விடை: வருடத்தில ஒரு முறை

(43) படிவம் 8 அறிக்கை இதனை விவரிக்கிறது.

விடை: நுகர்வோர் மற்றும் கொள்முதல் செய்தவரால் அப்புறப்படுத்துதல்

(44) மத்திய அமைச்சர் வன ஓய்விடங்களில் தங்கும் போது பின் கண்ட கட்டணத்தை அளிக்க வேண்டும்

விடை: செலுத்த வேண்டியதில்லை.

(45) எந்த அலுவலரின் பயணப்பட்டியல் மேலொப்பம் இன்றி பட்டுவாடா செய்யப்படும்?

விடை: வனப்பாதுகாவலர்

(46) கூடுதலாக வனச்சரகங்களை உருவாக்க அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர்

விடை: அரசு

(47) படிவம்-9 அறிக்கை இதனை விவரிக்கிறது?

விடை: வசூலிக்கப்படாத வருவாய்

(48) திருத்திய மதிப்பீடு பிரேரணைக்கு எந்த மாதம் முடிய செலவீனங்கள் கணக்கில் எடுத்தக் கொள்ளப்பட வேண்டும்?

விடை: ஜூலை

(49) வனப்பாதுகாவலர் வேலை அளவுத்தணிக்கை செய்ய வேண்டிய சதவீதம்?

விடை: 10%

(50) கோட்ட வன வரைபடத்தின் அளவுகோள்?

விடை: 1:2,50,000

(51) தமிழ்நாடு வெளிப்படை தன்மை ஒப்பந்த சட்டத்தின் படி சிறு தொழில் நிறுவனங்களுக்கு சலுகை எத்தனை சதவீதம் வழங்க இயலும்?

விடை: 15%

(52) காப்பு பதிவேடு இதற்காக பராமரிக்கப்படுகிறது?

விடை: வனச்செயல் திட்டம் செயல்படத்தப்படாத காப்பு காடு பகுதி

(53) படிவம் 5 அறிக்கைகள் இதன் விபரத்தினை தெரிவிக்கின்றன?

விடை: மரம் மற்றும் இதர வனப்பொருட்கள் வரவு மற்றும் வழங்கல்

(54) பட்ஜெட் வருடம் என்பது?

விடை: ஏப்ரல் முதல் அடுத்த ஆண்டு மார்ச் வரை

(55) வனப்பாதுகாவலர் இதில் குறைந்த அளவுக்கு குறையாமல் களப்பயணம் செய்தல் வேண்டும்?

விடை: 10

(56) வனப்பாதுகாவலரால் ஒப்பந்ததாரருக்கு ஒப்பளிப்பு ஏதுமின்றி எவ்வளவு தொகை முன் பணம் கொடுக்க அதிகாரம் உண்டு?

விடை: ரூ.500

(57) இத்தொகைக்கு அதிகமான மதிப்பீட்டு வேலைகள் மிக முக்கிய வேலையாக கருதப்படும்?

விடை: ரூ.1,60,000

(58) டாட்டன்ஹம் சிஸ்டம் பயன்படுத்தப்படாத அலுவலகத்தின் பெயர்?

விடை: வனச்சரக அலுவலகம்

(59) அரசுக்கு வனத்துறை தொடர்பான விபரங்களை தெரிவிக்கும் முக்கிய ஆலோசகர்?

விடை: முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்)

(60) கோட்ட வன அலுவலர் அளவுத் தணிக்கை செய்வதற்கான வரம்பு எத்தனை சதவீதம்?

விடை: 25%

(61) சம்பளப்பட்டியல்கள் எவ்வளவு காலம் பாதுகாக்கப்பட வேண்டும்?

விடை: 35 வருடங்கள்.

www.thamizhforest.com

(62) வன ஓய்விடத்தில் 12 மணி நேரம் தங்கும் அலுவலர் பின் கண்ட கட்டணம் செலுத்த வேண்டும்?

விடை: ஒரு நாள் வாடகை

(63) மண்டல அறிக்கை வனப்பாதுகாவலராக சமர்ப்பிப்பதற்கு கடைசி நாள் எது?

விடை: ஆகஸ்ட் 1

(64) வனக்காவருக்கு வரையரை செய்யப்பட்ட பெல்ட் எது?

விடை: காக்கி நைலான் பெல்ட்டுடன் அரசு முத்திரை

(65) தற்காலிக பணியிடங்கள் தொடர ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டிய அலுவலருக்கு பிரேரனை அனுப்ப கடைசி நாள்?

விடை: ஜனவரி 5

(66) கட்டுப்பாட்டு சுவடிகள் இந்த அலுவலரால் எழுதப்பட வேண்டும்?

விடை: மாவட்ட வன அலுவலர்

(67) ரூபாய் இரண்டு கோடிக்கு மேலான ஒப்பந்த வேலைகளுக்கு ஒப்பந்த புள்ளி அழைப்பு விளம்பரம் அரசிதழ் அல்லது செய்திதாள்களில் விளம்பரம் செய்யக்கூடிய குறைந்தபட்ச கால அவகாசம் இதில் எது?

விடை: 15 நாட்கள்

(68) கோட்ட வன அலுவலர் தனது இருவார நாட்குறிப்பினை இருவாரங்களுக்கு பிறகு எத்தனை நாட்களுக்குள் வனப்பாதுகாவலருக்கு சமர்ப்பிக்க வேண்டும்?

விடை: 5 நாட்கள்

(69) கோட்ட வன அலுவலர் தனது வருவாய் குறித்த முன்னேற்ற அறிக்கையினை வனப்பாதுகாவலருக்கு சமர்ப்பிப்பதற்கு கடைசி நாள் எது?

விடை: அடுத்த மாதத்தின் 8-ம் தேதி

(70) திருப்திகரம் இல்லை என ஒரு அலுவலக தணிக்கை முடிவு அறிவிக்கப்பட்டால் மறு தணிக்கை செய்யக்கூடிய கால அளவு எவ்வளவு?

விடை: ஆறு மாதம்

(71) மாதாந்திர கணக்குகள் யாருக்கு அனுப்ப வேண்டும்?

விடை: மாநில கணக்காயர்

(72) கோட்ட வன அலுவலர் வனச்சரக அலுவலருக்கு அதிக பட்சமாக எத்தனை மாதங்கள் விடுப்பு அனுமதிக்கலாம்?

விடை: 1

www.thamizhforest.com

(73) வனக்குற்றங்களில் விசாரணை நிலையினை தெரிவிக்க நீதித்துறை நடுவரால் பயன்படுத்தப்படும் படிவம் எது?

விடை: படிவம் E

(74) உத்திரவாத தொகை வேலை முடிவுற்ற இக்காலத்திற்கு பிறகு விடுவிக்கப்பட வேண்டும்?

விடை: ஒரு வருடம்

(75) முதன்மை தலைமை வனப்பாதுகாவலருக்கு இத்தொகைக்கான பண்டகப் பொருட்களை தள்ளுபடி செய்வதற்கன பொருட்களின் அதிகார வரம்பு?

விடை: ரூ.5,000

(76) கோட்ட வன அலுவலர் குற்ற வழக்கில் "அ" படிவம் பெற்ற பின்பு நீதிமன்றத்திற்கு அனுப்புதற்கோ வாபஸ் பெறுவதற்கோ இணக்க கட்டணம் வசூலிப்பதற்கு எத்தனை நாட்களுக்குள் முடிவெடுக்க வேண்டும்?

விடை: 10 நாட்கள்

(77) ஒப்பந்த தாரர்களின் பட்டியலில் எவ்வளவு தொகை காப்புறுதி தொகையாக பிடித்தம் செய்யப்பட வேண்டும்?

விடை: 5%

www.thamizhforest.com